दक्षिण रेलवे/Southern Railway

चेन्नै मंडल/Chennai Division

No.PUB/MAS/2020/12/04 Date:22.12.2020

**प्रेस विज्ञप्ति /PRESS RELEASE**

# TIRUVALLUR AND ARAKKONAM SUBURBAN RAILWAY STATIONS OF CHENNAI DIVISION GETS NEW ESCALATORS AND FOOT-OVER-BRIDGE

## New Escalator facility at Tiruvallur Railway Station:

Chennai Division of Southern Railway commissioned the new escalator facility at Thiruvallur Railways station on 19th December 2020 . This facility has been created at a outlay of Rs. 1.65 crores. Tiruvallur railway station serves as an hub of Suburban trains. This station deals an average of 172 passenger trains per day and 11 pairs of Mail/Express trains has intermediate stoppage at Tiruvallur railway station. This station has 6 platforms at two fast line and four slow lines. These platforms are well connected with a Foot-over-bridge for passengers to shift from one platform to another.

This station has recorded an average footfall of 90,000 passengers per day. The installation of new escalators will be of huge relief to the elderly , physically challenged and passengers with luggages detraining/entraining from Express trains to suburban trains. This new escalator has gained importance for hassle-free movement of passengers. These escalators are equipped with sensors and move automatically when the passengers come in contact. The Tiruvallur railway station which is being upgraded to a world class standard, now has been facilitated with two escalators, sanctioned by Railways. These two escalators setup near the foot-over-bridge on platform 2 & 3 are two way operational.

The escalator work commenced during December 2019. The suspension of train services during March 2020, due to CoVID-19 pandemic came in handy to carryout the work. Utilizing the lockdown period, Civil and Electrical works were fast tracked by the concerned engineering departments and the installation work of Escalators was completed by November 2020. The two escalators are installed in platform No. 2 & 3 to cater the passengers from

down fast line to slow line Suburban, detraining from Express trains to take suburban trains and vice versa.

**New Additional Foot-over-bridge at Arakkonam Junction:**

Arakkonam railway station is one of the major railway junction in Chennai Division. This railway station connects three different train routes, viz. Chennai – Jolarpettai, Chennai – Renigunta and Chengalpattu- Renigunta. Nearly 70 passenger trains per day are operated and 69 Mail/Express trains has an intermediate stoppage at Arakkonam. This junction has recorded an average footfall of 63,000 passengers per day.

An existing foot-over-bridge at Arakkonam Junction constructed towards Chennai Central end connects all 5 platforms and circulating areas with booking office. Due to huge train traffic at this junction and for smooth operation of Express and suburban train services, the platforms 1 & 2 were extended towards Katpadi end. New platforms 1A, 1B and 1C were also constructed to operate trains towards Chengalpattu direction. Due to construction of new platforms, the existing foot-over-bridge at Arakkonam junction was too far to connect the newly constructed platforms. Hence an additional foot-over-bridge has been constructed to connect left side circulating area with platforms 1 A,B,C , 2 & 3 and also to connect new second entry cirulating area on right side in order to cater the passengers from Chengalpattu – Arakkonam section.

The construction work of Foot-over-bridge commenced during the month of December 2019 and the same was completed during November 2020. The new FOB at Arakkonam will facilitate the travelling public to have better and easier connectivity for entraining/ detraining from Express trains and Chengalpattu bound passenger trains at Arakkonam junction.

Sd/-
ए.एलुमलै/ (A.Elumalai)
जनसंपर्क अधिकारी/ Public Relations Officer
चेन्नै मंडल/ Chennai Division

https://sr.indianrailways.gov.in/index.jsp
https://twitter.com/DrmChennai

**<u>சென்னை கோட்டம்</u>**

**<u>தெற்கு ரயில்வே</u>**

**No.PUB/MAS/2020/12/04** **நாள்: 22.12.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

**சென்னை கோட்டத்தின் புறநகர் ரயில் நிலையங்களான திருவள்ளூர் மற்றும் அரக்கோணத்தில் புதிய தானியங்கி நகரும் படிக்கட்டு மற்றும் புதிய நடைமேம்பாலங்கள்**

**திருவள்ளூர் ரயில் நிலையத்தில் புதிய தானியங்கி நகரும் படிக்கட்டு (எஸ்கலேட்டர்) வசதி:**

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம், திருவள்ளூர் ரயில் நிலையத்தில் புதிய தானியங்கி நகரும் படிக்கட்டு (எஸ்கலேட்டர்) வசதியை 2020 டிசம்பர் 19 அன்று ஏற்படுத்தியுள்ளது. சுமார் 1.65 கோடி ரூபாய் செலவில் இந்த தானியங்கி நகரும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. திருவள்ளூர் ரயில் நிலையம் புறநகர் ரயில்களின் ஒரு மையமாக செயல்பட்டு வருகிறது. இந்த ரயில் நிலையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 172 பயணிகள் ரயில்கள் இயக்கப்படுவதோடுமட்டுமல்லாமல், 22 மெயில் / எக்ஸ்பிரஸ் ரயில்கள் திருவள்ளூர் ரயில் நிலையத்தில் நின்று செல்கின்றன. இந்த ரயில் நிலையத்தில் இரண்டு விரைவு ரயில் தடங்கள் மற்றும் நான்கு புறநகர் ரயில் தடங்களுக்கென மொத்தம் 6 நடைமேடைகள் உள்ளன. ஒரு நடைமேடையிலிருந்து இன்னொரு நடைமேடைக்கு கடந்து செல்ல, அனைத்து நடைமேடைகளையும் இணைக்கும்விதமாக தளங்கள் ஒரு முழுநீள நடைமேம்மாலம் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் நிலையத்தை நாளொன்றுக்கு சராசரியாக 90,000 பயணிகள் பயன்படுத்துகின்றனர். ஒரு புதிய தானியங்கி நகரும் படிக்கட்டுகளை நிறுவப்படுவது முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்களிலிருந்து இறங்கி புறநகர் ரயில்களை பிடிக்கவும், கனமான

பெட்டி-படுக்கைகளுடன் மேம்பாலத்தை கடக்கும் ரயில் பயணிகளுக்கு இது பெரும் உதவியாக அமையும். இந்த புதிய தானியங்கி நகரும் படிக்கட்டு வசதி கூட்ட நெரிசல் மிகுந்த நேரங்களில் பயணிகள் நடைமேம்பாலத்தை எளிதாக கடக்க உதவும். இந்த தானியங்கி நகரும் படிக்கட்டில் சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளதால், பயணிகள் இதன் அருகே நெருங்கி வரும்போது தானாகவே இயங்கும் ஆற்றல் பெற்றுள்ளது. திருவள்ளூர் ரயில் நிலையம் உலகத் தரத்திற்கு ஏற்ப உயர்த்தப்பட்டு வருகிறது. தற்போது அமைக்கப்பட்டுள்ள இந்த இரண்டு தானியங்கி நகரும் படிக்கட்டு வசதி இதற்கு சான்றாக அமைந்துள்ளது. 2 & 3ம் நடைமேடையில் இந்த இரண்டு தானியங்கி நகரும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இது இருவழிகளில் (ஏற/இறங்க) செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தானியங்கி நகரும் படிக்கட்டு பணிகள் டிசம்பர் 2019 ல் தொடங்கப்பட்டன. கொரோனா நோய்த்தொற்று காரணமாக 2020 மார்ச் மாதத்தில் நாடுமுழுவதும் ரயில் சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. மேலும் பொதுமுடக்க காலத்தைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட பொறியியல் துறைகளால் கட்டுமானம் மற்றும் மின் உபகரண பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. நவம்பர் 2020 ல் அனைத்து பணிகளும் நிறைவு பெற்றன. இரண்டு தானியங்கி நகரும் படிக்கட்டுகள் 2 மற்றும் 3 ம் நடைமேடையில் நிறுவப்பட்டுள்ளதால் விரைவு ரயில்களிலிருந்து புறநகர் ரயில்களுக்கு மாறும் பயணிகளுக்கு பேருதவியாக அமையும்.

**அரக்கோனம் சந்திப்பு ரயில் நிலையத்தில் புதிய கூடுதல் நடைமேம்பாலம்:**

அரக்கோணம் ரயில் நிலையம் சென்னை கோட்டத்தின் முக்கிய ரயில் சந்திப்புகளில் ஒன்றாகும். சென்னை - ஜோலார்பேட்டை, சென்னை - ரேணிகுண்டா மற்றும் செங்கல்பட்டு- ரேணிகுண்டா என மூன்று வெவ்வேறு ரயில் வழித்தடங்களை இந்த ரயில் நிலையம் இணைக்கிறது. நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 70 பயணிகள் ரயில்கள் இயக்கப்படுகின்றன. மேலும் 69 மெயில் / எக்ஸ்பிரஸ் ரயில்களில் அரக்கோணம் ரயில் நிலையத்தில் நின்று செல்கின்றன. நாள்தோறும் சராசரியாக 63,000 பயணிகள் இந்த ரயில் நிலையத்தை பயன்படுத்துகின்றனர்.

இந்த ரயில் நிலையத்தில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலம் ஐந்து நடைமேடைகள் இணைக்கும் விதமாக கட்டப்பட்டுள்ளது.இது பயணச்சீட்டு அலுவலகம் மற்றும் இரு பக்கங்களிலும் உள்ள நுழைவு வாயில்களை இணைக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த சந்திப்பில் அதிக ரயில்கள் இயக்கப்படுவதால் ரயில் இயக்கத்தை எளிதாக்கவும், புறநகர் ரயில் சேவைகளை சீராக இயக்கவும், நடைமேடை 1 மற்றும் 2 ஆகியவை காட்பாடி திசையில் கூடுதலாக நீட்டிக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மார்க்கத்தில் ரயில்களை இயக்க புதிய நடைமேடைகள் 1 ஏ, 1 பி மற்றும் 1 சி ஆகியவை புதிதாக கட்டப்பட்டுள்ளன. இந்தப் புதிய நடைமேடை களை இணைக்கும் விதமாக புதிய நடைமேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இரண்டாவது புதிய நுழைவாயில் உருவாகியுள்ளதால் விரைவு ரயில்களில் மற்றும் செங்கல்பட்டு மார்க்கத்தில் இருந்து வரும் ரயில்களில் இறங்கும் ரயில் பயணிகள் எளிதாக ரயில் நிலையத்திலிருந்து வெளியே செல்ல முடியும்.

புதிய நடைமேம்பாலத்தின் கட்டுமானப் பணிகள் டிசம்பர் 2019 ல் தொடங்கப்பட்டன. இதன் முழு பணிகளும் நவம்பர் 2020 ல் நிறைவடைந்தது. அரக்கோணத்தில் கட்டப்பட்டுள்ள புதிய நடைமேம்பாலம், ரயில் பயணிகள் எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் செங்கல்பட்டு மார்க்கத்தில் இயக்கப்படும் பயணிகள் ரயில் ஆகியவற்றிலிருந்து புறநகர் ரயில்களுக்கு மாற மற்றும் ரயில் நிலையத்திலிருந்து வெளியே செல்ல எளிதாக்கியுள்ளது.

**-Sd-**

**அ. ஏழுமலை**

**மக்கள் தொடர்பு அதிகாரி**

**சென்னை கோட்டம்**